சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கால்நடை பராமரிப்புத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.த.சடையன், த/பெ.சி.தர்மன் (லேட்) – இளநிலை உதவியாளராக பணி நியமனம் – விதித்தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது புரட்டாசி மாதம் 09–ம் நாள்

அரசாணை (டி) எண்.465 நாள் 26.09.2022

படிக்கப்பட்டது:

1. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 44950/ஆர்.3/2007, நாள் 25.11.2019 மற்றும் 10.12.2021.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.

------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடிதத்தில், இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் கேட்டில்மேனாக பணியிலிருக்கும் போது 13.12.1998 அன்று மறைந்த திரு.சி.தர்மன் என்பவரது மகன் திரு.த.சடையன் என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலூர் மண்டலம், இராணிப்பேட்டை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 22.09.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் மேலும் தனியருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டதில் தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரிய விண்ணப்பமானது அரசுப் பணியாளர் மரணமடைந்து மூன்றாண்டுகள் கடந்த நிலையில் அளிக்கப்பட்டுள்ளதாலும் விண்ணப்ப நாளில் தனியருக்கு உரிய வயதுதகுதி இல்லை என்பதாலும் இது அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b)க்கு முரணானதாகும் என்றும் மேலும் தனியருக்கு பணப்பலன்கள் நியமன நாள் முதல் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2) ஆகிய விதிகளுக்கு விலக்கு அளித்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 22.9.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.த.சடையன் என்பவரின் பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 22.09.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்ய

...icer,
...ary Services, ...nimal Husbandry
Chennai – 35.

அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களித்தும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b) மற்றும் பணப்பலன்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)) ஆகியவற்றை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ல், பிரிவு 58-ன் கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தளர்வு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. கால்நடை பராமரிப்புத் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.த.சடையன், த/பெ.சி.தர்மன் (லேட்) என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 22.09.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால் இதனை நியமன அலுவலருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுசெய்யுவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பணிக்கப்படுகிறது.

4. இவ்வரசாணை தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.15658/க்யூ-1/2022-1, நாள் 15.09.2022ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.
திரு.த.சடையன், இளநிலை உதவியாளர், (ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35 (வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர் .

<u>நகல்</u>

தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் - மீனவர்நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (தொழிலாளர் நலன்- திறன் மேம்பாட்டுத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு முதன்மைச் செயலளாரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27.9.22
பிரிவு அலுவலர்
27.9.22